


அந்தி மழை

வைகை வாணன்

அந்திமழை

வைகை வாணன்

அகரம்
2, சிவன்கோயில் தெற்குத்தெரு
சிவகங்கை. - 623560

அந்திமழை
(கவிதைகள்)
வைகைவாணன் / முதற்பதிப்பு அக்டோபர் 1991 /
அச்சும் வெளியீடும் அகரம் சிவகங்கை / பக்கம் 80 /
விலை ரூபாய் 12—00

மதிப்புரை

நா. முகம்மதுசெரீபு

எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (வரலாறு) ஏ.எம்.ஏ.'
(வரலாறு), எம்.எட்..'
சிறப்பாசிரியர் 'சமூக நிழல்' திங்களிதழ்
மானாமதுரை.

இலக்கியப் பெண்ணின் மூத்த மகள் கவிதை. மக்களுக்கு அறிமுகமான முதல் இலக்கியமும் அதுதான். எல்லா மொழிகளிலும் கவிதையே முதலில் பிறந்திருக்கிறது. ஏனெனில் அதைப் படித்து மகிழ்வதும் படித்ததை நெஞ்சில் பதிந்து வைப்பதும் இலகுவானது. ஆனாலும் எழுதப் படுவன எல்லாம் கவிதையாகிவிடாது. கருக் கொண்ட மேகமே மழையாய்ப் பொழியும். அம் முறையில் உருக்கொண்ட கவிதையில் உயிரும் உள்ளடக்கமும் உறவாடிநிற்கவேண்டும். இத்தனை பெருமைக்குரிய கவிதைப்பெண்ணைக் கைப்பிடித்ததாலேயே கவிஞர்கள் காலமெல்லாம் காலையிளம் பரிதி போல உலா வருகிறார்கள். மக்களின் மனங்களில் நின்று மகத்துவம் புரி கிறார்கள். கவிஞனைச் சேருகின்ற சிறப்புகள் சிலவேளை மற்றவரைக் காழ்ப்புக் கொள்ள வைப்பதும் இது காரணந்தானோ!

கவிஞர் வைகை வாணன் கடந்த முப்பதாண்டு களாக வளமார்ந்த வைகைக் கரையில் வாழ்ந்து வருபவர். அங்கே காற்றோடு கவிதை மணக் கிறது; வைகை நீரோடு கற்பனை சுரக்கிறது.

கண்ணிற் படுவனவெல்லாம் கவிதையைக் காட்டி நிற்கும், கட்டற்ற கற்பனையை ஊட்டி நிற்கும். அதுவே ''அந்தி மழை''யின் ஜனனத்துக்கு ஆதாரம். ''கண்ணில் படுவதெல்லாம் என் கவிதை கட்டித் தழுவி வரும் ''எனப்பாடுவதே இதற்குச் சான்று.

'மணக்காத பூக்கள்', 'ஒரே நிலா' இவற்றினின் றும் சற்றே விலகிப் பெய்கிறது ''அந்தி மழை''. கவிஞர் தற்போது ஐம்பதுகளில் இருக்கிறார். ஆனாலும் காதற் சிந்தனைகளோ காளையிளம் பருவத்திற்குச் சற்றும் குறையாது பொங்கிப் பெருகுகிறது. மானே, மயிலே, பூவே, காயே கனியே, காவிரியே என்று சந்தத்திற்காகப் பாடாது அடிமனத்தின் அற்புதங்களை அழகாய்ச் சித்திரிக்கிறார். அந்தச் சுவை 'மேனிப்பாகு' என்று ஏங்குகிறார்; ஏக்கம் கொள்ளச் செய்கிறார்.

குருதி அழுத்தம் குறைக்க கவிஞரை சிலநாள்கள் மருத்துவமனையில் கிடத்தி வைத்தனர் நேயமிகு மருத்துவர்கள். அங்கிருந்த வெள்ளைப்புறாக்கள் கவிஞரைச் சுற்றி வந்த வேளையிலும் இவருக் குக் கவிதை வருகிறது. ''மை விழியாம் ஊசியி னால் மருந்து போட்டாய்'' என்கிறார். அடுத்த இருக்கையில் அமர்ந்திருந்த அருந்ததியிடம் அன் பாய் குடையும் இரவல் கேட்க, அதுவும் தத்துவ முத்துகளை அள்ளி வழங்கும் அற்புதக் கவிதை யாக அரும்புகிறது.

காதலனாகவே கவிதைபாடும் கவிஞர் கடைசியில் காதலியாக, காதல் கண்ணம்மாவாகக் கவிதை பாடி கண்ணாம் பூச்சி காட்டுகிறார். ''பொன் உடல் பட்டதும் புதிய உலகம் பிறக்கிறது'' என்று அவள் பாடுகிறாள். அவனை எண்ணி ஏங்குகிறாள். காலங்காலமாய் காதல் உணர்வு

களைக் காதலனுக்கே ஏற்றிப்பாடுவர்கவிஞர்கள். இவரோ அவளது மனநிலையையும் மாட்சிமை யோடு எடுத்துரைக்கிறார். காதலர்களே! கற்றுத் தேற வேண்டிய காதல் வரிகள் கொட்டிக் கிடக் கின்றன. அள்ளிக்கொள்ளுங்கள் ஆனமட்டும் என்று கூறவைக்கிறது.

அனைத்துமே காதல்பாடும் கானல்வரிகளாக இருந்து விடாமல் மற்றவற்றையும் மற்றவரை யும் சற்றே எண்ணி, முத்துப் பதித்தது போல மாறுபட்ட சிந்தனைகளையும் தீட்டிமகிழ்கிறார். அழகியல் மிளிரும் அற்புதக் கவிதைகள் ஆங் காங்கே அழகு நடமிடுகின்றன. பிள்ளைப் பிரா யத்தில் ஆடியும் ஓடியும் பாய்ந்து திரிந்த கல்ல ணைக் குன்றுக்கு ஒரு கவிதை. பணியில் அமர்ந்து பாங்காய் வாழ்க்கை பழகிய அந்தக் கோடை மலையின் கோபுரம் காட்டும் குறிஞ்சிக்கு ஒரு கவிதை ''கோடை மலையாம் நற்றாய் மடியில் நான் கிடந்தேனே!'' என்று பாடுகிறார். கேரளம் சென்ற போது முண்டின் அழகைக் கண்டு மகிழ்ந்து தீட்டிய காவியம் கோடி பெறும். அந்த வண்ணப் பூக்கள் வரிசை வரிசையாய் நெஞ்சத் தோட்டத்தில் வரைவதோ எண்ண ஓவியங்கள்!

''இன்று பாரதி இங்கு வந்தால்'' என்ற கவிதை பாரதி கனவு கண்ட நவபாரதமும் தற்போதைய பாரதமும் தொடர்பு இன்றி இருப்பதைத் தொகுத்துக் காட்டுவது. பாரதமும் சோவியத் தும் நட்பில் திளைப்பதால் நானிலம் பிழைக் கும் என்பதை நயமுடன் காட்டும் 'உலகம் மகிழும்' என்ற கவிதை, உள்ளதைக் காட்டும் காலக் கண்ணாடி, கலாசார உறவிலே மனங்கள் ஒன்றுவதைக் காட்டும் உருப்பெருக்கி.

'சித்திரை மங்கை சூலுற்றுப் பெற்றவளே தை மகள் எனப்பாடும் வரிகள் கவிஞரின் புதிய உவமைக்குப் போடப்படும் முத்திரைகள். அடுத்து, கார்த்திகைப் பெண்ணையும் மார்கழி மங்கையையும் போற்றி மகிழும் பைந்தமிழ் வரிகள் படிக்கப்படிக்கப் பரவசமூட்டும் பாசவரிகள்; நெஞ்சம் கவரும் நேசவரிகள்!

காதலிக்கு எழுதுகின்ற கடிதத்தில் துடித்தேன், துவண்டேன், தூங்காது நெளிந்தேன், துயரத்தால் சரிந்தேன் என்ற பழகிய வரிகளை இவரிடம் பார்க்க முடியவில்லை. வாய்த்த நல்ல 'ரேசன்' கடை அரிசி, பருவம் தவறிப் பொய்த்த வானம், வறுமை மிஞ்சி வாட்டிய சோகம், கீறல் விழுந்த வயல்கள், கிளிகள் கூவா மாமரங்கள், ஆடுவார் அற்ற அரசமரங்கள், விழுது க்காணா ஆலமரங்கள், இப்படியான இன்றைய கிராமத்தின் நிலைகேட்டு 'வைகை' எழுதுகின்ற வைரவரிகளில் மண்ணின் மணத்தை மாந்திப் பருகிய கவிஞரின் மாண்பும் மாறாத நேயமும் தெரிகிறது, சின்னப் பிணக்குகளைச் செதுக்கி எறியும் நேர்மை புரிகிறது.

இப்படி ஆயிரமாயிரம் அற்புதங்களைப் படைக்கும் வைகைவாணன் வரலாற்று வாணனாக வலம்வர வேண்டும், நெடுங்கவிதை படைக்க வேண்டும். நெஞ்சம் நெகிழ மாநிலத்தார் அதை நேசிக்க வேண்டும். விருதுகளைப் பெற்று இந்த மண்ணுக்கு மகுடம் சூட்ட வேண்டும். இந்தப் பெருவிருப்பை கவிஞர் வைகைவாணன் நிறைவேற்றித் தரவேண்டும் என்பதே எனது ஆசை; ஆர்வம்-

20.9.91. நா. முகம்மதுசெரீபு

இருக்கிறேன்
தயாராகவே...

என் இளைய வயதுப் பழைய கிராமத்தின் இயற்கை அழகில் நான் மூழ்கிக் கிடந்த அடி நாட்களின் நினைவுகளே எனக்குச்சில கவிதைகளை இன்னும் தருகின்றன!

நிருவாக எந்திரத்தின் காகித வார்ப்புகளுக்கிடையே என் பொறுப்பின் சுமை கூடிப்போன நேரம் இது!

ஆயினும், இந்த நெருப்பு நேரங்களுக்கிடையிலும் நிசமான கவிதைகள் என் கண்ணில் பட்டால் கூட இதயம் குளிர்ந்து போகிறது! மகிழ்ந்து போகிறது!!

அந்த நிசக் கவிஞர்களோடு— எழுத்தாளர்களோடு— கதாசிரியர்களோடு உறவாடி மகிழ ஒரு துளி நேரம் கிடைத்தால் கூட எனது மனமும் முகமும் மகிழும்! உடலும் உள்ளமும் துள்ளும்! ஆண்டொன்று போனாலும் வயதொன்று குறையவே செய்யும்!

என் இளமையின் ரகசியம் இதுவே.

இந்த என் இதய மகிழ்ச்சிக்கு- தூய்மைப் பண்புக்கு நல்லவர்கள் சிலர் காரணம்; அவர்களில் முன்னதாய் நிற்போர் மூவர்! அவர்கள்; நட்பிலும் கவிதை சுரக்கும் அண்ணன் கவிஞர் மீரா. . பண்பிலும் பரிவு காட்டும் தோழர் செரீபு...! பாசத்திலும் நேசம் வைத்த—கனத்த

மீசை வைத்த பிடாவூரார்!

இந்த என் 'அந்தி மழை' கூட சுற்றமாய்ச் சுற்றியுள்ள நண்பர்களுக்காக— நண்பர்களால் நண்பர்களைக் கொண்டு (நண்பிகளும் இருக்கலாம்...!) எழுதப் பட்டதே!

இது அவர்களுக்கு இனிக்கவே செய்யும்.

வேறு சிலருக்கு இது கசந்தால், விமர்சனக் குடை பிடித்து வந்து என்னை நேருக்கு நேராய்க்கூட வாரலாம்!

எதிர் கொள்ளத் தயாராகவே இருக்கிறேன்

மெச்சத் தகுந்தவாறு அச்சாக்கித் தந்த 'அகரத்துக்கு நன்றி.

14, பிருந்தாவனம் அன்புடன்,

மானாமதுரை—623606. 'வைகை வாணன்

26.9.91 (ப. வே. இராமசாமி)

என் கவிதை

கண்ணில் படுவதெல்லாம்
என் கவிதை
கட்டித் தழுவி வரும்!
இம்
மண்ணின் சிறு துரும்பும்
என் கவிதை
மகுடம் புனைந்து வரும்!

கொள்ளை வனப்பையெல்லாம்
என் கவிதை
கூட்டி எடுத்து வரும்!
அதனை
அள்ளிப் பருகிடவே
என் கவிதை
துள்ளிக் குதித்து வரும்!

பாடு படுபவனையே
நித்தம்
பாடிப் புகழ்ந்து வரும்..!
வாழ்வின்
மேடு குழிகளையே
என் கவிதை
மேவி நடந்து வரும்..!

சேதி அனைத்தையுமே
என் கவிதை
செப்பி நடந்து வரும்..
ஒரு
நாதியிலாதவர்க்குப்
புதிய
நம்பிக்கை ஊட்டி வரும்!

பொதுமை நலம் பூக்க
என் கவிதை
பூத்துக் குலுங்கி வரும்..!
புதுமை வளர்ந்தோங்க
நித்தம்
புதிதாய்ப் பிறந்து வரும்!

பேனா மீனவர்கள்

எழுத்தர்கள் என்றாலோ
கட்டுகளைத் தூக்கிக்
கழுத்தை வளைத்துக்
கணக்குகளைப் பார்ப்போர்.

கடிதக் குவியலுக்குள்
மூழ்கி நிதம் மூச்சடக்கி
உத்தரவு முத்தெடுக்கும்
பேனா மீனவர்கள்!

நிர்வாக மண்டபத்தின்
சட்ட விதிகளுக்குள்
அதிகாரக் காற்றுக்கே
ஆடும் சருகுகள்!

ஆனால்
எழுத்தாளர் என்றால்
இயங்கும் சமுதாயக்
கோணல். நெளிவுகளைக்
கூர்ந்த மதியோடு
பேனா பிடிக்கும்
கரத்தால் சரிப்படுத்தத்
தானாய் உழைக்கின்ற
தங்க மனத்தவர்கள்!

படைக்கும் பிரும்மாக்கள்!
பொல்லாக் கொடுமைகளை
உடைத்தே எரியும்
உயர் சக்தி எந்திரங்கள்!

எந்தச் சபலங்கள்
எந்தச் சலனங்கள்
வந்தே மயக்கிடினும்
வாரித் தழுவிடினும்
கொஞ்சமும் அஞ்சாமல்
கொண்டவுயர் கொள்கைக்காய்
துஞ்சாது (எ)ழுதி வரும்
திண்ணிய நெஞ்சினர்!

தீயில் எறிந்தாலும்
சிலுவை அறைந்தாலும்
தீயுமிழும் துப்பாக்கிக்
குண்டில் மடிந்தாலும்

பாயில் படுத்தாலும்
நோயில் விழுந்தாலும்
நஞ்சைக் கலந்தாலும்
வஞ்சகம் சூழ்ந்தாலும்

மூச்சடங்கிப் போகும் வரை
முன்னேற்றப் பாதையிலே
வீச்சு நடை போடுவோரே
விவேக எழுத்தாளர்!

‘டெக்னிக்’

பல பேர்
பரிசுச் சீட்டில்
வந்த பணத்தை
புல்லில் சிந்திய
தவிடாய்ப் போக்கினர்.

ஆனால்
மக்காயிருந்த நம்
மொக்கச் சாமி
கல்லில் எழுத்தாய்
நிலைக்க வைத்தான்.

எப்படி..?!

பார்க்க வேண்டியவரைப்
பார்த்து வந்தான்;
பத்திரிக்கையில் விளம்பரம்
பக்குவமாய்ச் செய்தான்:
‘சீட்’டுக்குப் ‘பத்து’
சிம்பிளாய் வாங்கினான்

இப்போது
பிளிமத்தில் மிதக்கிறான்
ஃபிளைட்டில் பறக்கிறான்
எல்லாம் அந்த
‘டெக்னிக்’ தெரிந்து
‘பாலி
டெக்னிக்’ திறந்ததே

974

அடையாளம்

'வீரம்' என்றன்
பேராம்—
வியட் நாமில்
நான் பிறந்தால்;

'பேருழைப்பே'—
என் பேராம் சோவியத்தில்;

மாறாக—
இந்தியத்தாய்
ஈன்றதனால்
என்பேர் 'கடும்பசி'யாம்;

சிந்திப்பீர் . .
ஏனோ சிரிப்பு . . ?

துடிப்பு!

இரவுக்கு மலர்கின்ற பூவே!
காதல்
இளமைக்கு விருந்தாகும் கனியே

இன்ப
உறவுக்குப் படிகின்ற மயிலே!

என்றன்
உடலுக்கும் மனதுக்கும் ஏற்ற
கன்னிப்
பருவத்தின் சுவை மேனிப்பாகே!

சொக்கும்
பார்வைக்குள் மயக்கத்தைப் பாய்ச்சி
நெஞ்ச
நிறைவுக்கே இனிப்பாகும் நினைவே

உன்னை
நெருக்கத்தில் அணைக்கத்தான்
துடிக்கின்றேனே!

உயிர் தின்னும்....

நோய் கொடுத்த பார்வையிலே
மருந்தும் வைத்தாய்!

நூல்போன்ற இடைக்கொடியின்
உச்சி மீது
காய்ப் பருவக் கனியிரண்டை
மூடி வைத்தாய்!

கனிவான மொழி தன்னைப்
பேச்சில் வைத்தாய்!

தேய்பிறையை நெற்றியிலும்
கரு மேகத்தைத்
திரள் திரளாய்க் கூந்தலிலும்
சேர வைத்தாய்!

சாய் கதிரின் பொன்மாலை
நேரம் என்னைச்
சந்தித்தாய்!

நெஞ்சத்தில்
சலனம் வைத்தாய்!

தையலுனைக் கண்டதனால்
மையல் கொண்டேன்;

தணியாத ஆசையினால்
மெலிய லானேன்;

மையல் நோய் தந்திட்ட
மயக்கம் தீர
மைவிழியாம் ஊசியினால்
மருந்து போடாய்!

கைமலரை முகமலரைக்
கனிவாய் சிந்தும்
கவின் சிரிப்பு நன்மலரை
என் மேல் தூவ

மெய்யழகே நீ இனியும்
வாரா விட்டால்
மெதுவாக என்னுயிரை
மரணம் தின்னும்.

என்னமாய் அன்னங்கள்..!

வெள்ளைக் காலுறை!
வெள்ளைக் காலணி
வெள்ளைக் காரியைப்
போலவே மேலே
வெள்ளுடை!

இடுப்பில்
'சிக்' கெனப் பிடிக்கும்
நல்லுடை! உள்ளுடை!!

o

தாமரைப் பொன்முகம்!
பூவிழிக் கண்ணிமை!

o

கொண்டையின் உச்சியில்
வெண்ணிறப் புறாக்கள்
'ஜிவ்' வெனப் பறப்பதைப்
போன்றதோர்
பாவனை ஓட்டம்!
பளிச்செனும் தோற்றம்..!!

o

நாற்பது வயதை
எட்டினால் கூட
இருபதைக் கழித்து
இளமையைக் காட்டும்
சேவையில் விளைந்த
தேவதை மலர்கள்..!

o

கைகளில் ஏந்திய
பீங்கான் தட்டின்
கண்ணாடிக் குவளையில்
காய்ச்சல் அளக்கும்
'குச்சி'கள் என்ன..!

'பிறை' வடிவான
பீங்கானுக்குள்
'நரை' வடிவான
பஞ்சுத் துகள்கள்
நைந்து கிடக்கும்
நளினம் என்ன.,!

o

தெர்மா மீட்டரைத்
தெம்பை இழந்தோர்
வாய்க்குள் செருகி
தளிர்க் கரம் போன்ற
தன் மணிக் கட்டில்
துலங்கும் 'மணி'ப் பொறி
பார்த்த படியே
வாய்க்குள் துடிப்பை
வரிசையாய் எண்ணும்
அக்கறை என்ன,.!
அழகுதான் என்ன
மொக்கு விரியா
மோகனம் என்ன..!

o

செவிலியச் சித்திரச்
சீரடி மகளே...
உனது
காலடி பட்டால்
'வார்டு'கள் சுத்தம்..

கையடி பட்டால்
மெத்தைகள் சுத்தம்..

உன் மேல்
நோய் முகம் கொண்டோர்
கண்ணடி பட்டால்
என்னடி குற்றம்..
என்னடி நட்டம்..?!

கண்ணகியும்
மாதவியும்
'மேகலை'ப் பெண்ணுக்கு
அன்னையர் தானே
இல்லையா மானே..?!

அந்தி மழை

சின்னத் தூறல்
மழையாய் மாறிட
மாடிச்
சன்னல் வழியே
சாரல் அடித்தது.

மேசையில் கிடந்த
கோப்புகளில் கூட
விசும்பின் துளிகள்
வந்து விழுந்தன.

மின்னல் பளிச்சிட
மின்சாரம் அறுந்ததால்
விசிறிச் சுழற்சியின்
வேகம் நின்றது!

மழையும் பெரிதாய்
வலுக்கும் முன்னே
வெளியில் போய் ஒரு
காபி குடித்து
வரலா மென்றே
கிளம்பினேன் மெதுவாய்.

அடுத்த 'சீட்'
அருந்ததி இடத்தில்,

''குமாரி,. உங்கள்..
குடைதர முடியுமா சற்று..''
எனக்
கேட்டுக் குழைந்தேன்.

''லேடீஸ் குடையிது..
புத்தம் புதியது..
ஒரு
'லேடி''யைப் போலவே
பக்குவமாகக்
கை
பழக வேண்டும்..''
என்று சொல்லிக்
கொடுத்தாள்; வாங்கினேன்;

o

திடீரென்று
ஆணொரு பெண்ணாய்
ஆகமுடியுமா..?!
அதனால்

குடையைக் குமாரியாய்
நினைத்துக் கொண்டே
மெதுவாய்த் தொட்டேன்..
மெதுவாய் விரித்தேன்..

தெருவில் இறங்கி
மழைநீர் கடந்து
டீக்கடை வாசலில்
ஒதுங்கிய கும்பலில்
'குமாரி' கைப் பிடித்து
ஓரமாய் நின்று
தேனீர் அருந்தித்
திரும்பி வந்தேன்.

உள்ளே நுழைந்ததும்
விரித்த குடையைச்
சுருக்கிய போது
சட்டென விறைப்புக்
கலைந்தது!
மீண்டும்
கைப்பிடி விசையை
அழுத்திய போது
கம்பியெல்லாம்
உள்
மடங்கியதாலே
வழு வழுத் துணியும்
'குபுக்'கெனச் சுருங்கி
சிக்கலாகிச்
சிறியதாய்ப் போனது!

திரும்பக் கொடுக்கையில்
விரிக்கத் தெரியாமல்
என்ன இப்படிப்
பண்ணி விட்டீர்கள்.,?
என்று மிகவும்
அங்கலாய்த்தாள்.

''சொன்னபடியே
ஒரு
லேடியைப் போலப்
பக்குவமாகவே
உங்கள் குடையைப்
பழகி எடுத்தேன்..
விரித்தேன்..

ஆனால்
ஆண்கை பட்டதனால்
தானோ என்னவோ
நாணிக் கோணிக்

சுருங்கிக் கொண்டது
ஹி... ஹி..'' என்றேன்..

வெடுக் கெனப்
பிடுங்கினாள்.

லேடீஸோடும்
அம்பரெல்லாவோடும்
பக்குவமாகப்
பழகா விட்டால்
சிக்கல் வந்திடும்
ஜாக்கிரதை...'' என்றவள்
குடையை விரித்துக்
கோபமாய் நடந்தாள்!

என்
விழிக்குள்ளே
உன்
மாக்கோலம்.....

என்
விழியெல்லாம்
உன்
அழகுருவம்...!

என்
மொழியெல்லாம்
உன்
திரு நாமம்...!

ஓ...
வழியெல்லாம்
உன்
சதங்கையொலி...!
என்
வாழ்வெல்லாம்
உன்
நினைவலைகள்...!

இரவெல்லாம்
உன்
கனவுகளாம்...!

என்
உடலெல்லாம்
உன்
பரவுதலாம் . !

வரவெல்லாம்
உன்
பொலிவுகளாம்..!

அடி
செலவெல்லாம்
என்
மெலிவுகளாம்..!

இசையில்அசையும் அழகே.!

அழகே...
நீ ஆடாயோ...!
கலை பழகும்
அழகே...
நீ ஆடாயோ...?

ஒளிரும் இளமை
அழகு குலுங்கிட
உன்றன்
ஒயிலில் எனது
உளமும் மயங்கிட
அழகே
நீ ஆடாயோ...
கலை பழகும்
அழகே
நீ ஆடாயோ..?!

o

ஆடும் உனதிரு
விழிமலரோடு
கூடி வளர்சடைக்
கருங்குழற் காடு
தோடும் இருசெவிக்
குழையத னோடு
ஓடி ஓடி எனை
நாடி நாடி இசை
பாடிப் பாடி நிதம்
அழகே
நீ ஆடாயோ...?
கலை பழகும்
அழகே
நீ ஆடா யோ...?!

கையும் மலரென
மெய்யும் கனியென
தையல் உனதிடை
சின்னக் கொடியென
பெய்யும் இசைமழை
தன்னில் அசைந்திட
அழகே
நீ ஆடா யோ.. ?!
கலை பழகும்
அழகே
நீ ஆடா யோ . . ?

o

உன்னை மணந்திட என்
உள்ளம் விரும் பிடில்
எவர்
என்னைக் குறைசொலி
என்ன பயனடி . . ?
உயர்
பொன்னைப் பொருளினைத்
தூசி எனச்சொல்லி
அழகே
நீ ஆடாயோ . . ?
கலை பழகும்
அழகே
நீ ஆடாயோ . . ?!

கவிதைக் கடிதம்

௧

உயரிய நட்புக்கு
ஒருபதமாகி
வெய்யிலாய் ஒழுகும்
வீட்டில் ஒடுங்கி
என்றன்
ஊரில் வாழும்
ஒரு தமிழ் அன்பரே...
உழைக்கும் தோழரே...!
வணக்கம்
தமிழால் கவிதையால்
தமியேன் நலமே
அவ்விடம்—
வறட்சியால் வாடும்
சிற்றூர் நிலையை
விளக்கி மொழிந்தநும்
விரிமடல் கண்டேன்;
தமிழ்நடை தந்த
அமிழ்தினை உண்டேன்
இருப்பினும்—

'கமழும்' அரிசியை
'ரேசன்' கடையில்
ஓரிரு வேளைக்கு
உணவாய்ப் பெறும்நிலை
வாய்ந்தது எண்ணி
மனங்குமை கின்றேன்,

o

வயலும் தோட்டமும்
வாய்ந்த நும் போன்றார்
கலங்கும் நிலைக்குப்

பருவம் தவறி
வானம் அந்தோ
மழைக்கா திருப்பதும்—
தோட்டக் கிணற்றில்
தூர்வை எடுக்காது
துயரம் வந்தே
சூழ்ந்து கொண்டதும்
காரணம் என்றுநும்
கடிதம் சொல்லும்.
வளம்பெற—
நன்றாம் இயற்கையும்
நம்மின் முயற்சியும்
ஒன்றாய்த் துணைசெயின்
ஒடுங்கும் துயரம்

o

இந்த நேரம்
என்மன அரங்கில்
முந்தைய நாளில்
நம்
மூதூர் தன்னில்
வயல் வெளி கண்மாய்
குளம் குட்டை யாவும்
நிறைந்திடும் வண்ணம்
நெடுவான் மேகம்
கலையாது கூடி
மழையாய்ப் பொழிந்தும்
வழிந்து நீர் ஓடியும்
வளமை பொங்கிய
இளமைக் காலம்
நினைவில் படர்ந்தும்
நெளிந்தும் அழிந்தும்
நிசமாய் என்னை
அலைப்புற வைக்கும்!

பழ நிலை மீண்டும்
பாங்குற வாய்க்கவே
விழைவேன்; துயர்கள்
விரிகதிர் கண்ட
பனிபோல் விலகிட—
இலாதார் உடையார்
எனும் நிலை மாறிட—
மழைவளம் சூழவும்
மனதால் வேண்டுவேன்.

o

ஒருலகம் ஓரினம்
எனும் கொள்கை
வேர்விடும் காலம்
விரைவில் மலரவும்
நாடும் நம்சிறு
வீடும் தெருவும்
சீர்படும் வண்ணம்
செழுமை தழைக்கவும்
நேர்பட ஒழுகியே
நேயம் வளர்ப் போம்!

o

சின்னப் பிணக்குகள்
செதுக்கி எறிந்தே
உள்ளம் திருந்தி
உயர்வு பெறும்நாள்
மெள்ள—அல்ல
விரைந்தே வரட்டும்...!

அன்புடன்,

வைகை

கோடையின் மடியில்...

தரையில் வெம்மை
தகிக்கும் வெய்யில்
மலையில் அன்பாய்
வணக்கம் செய்யும்!

வேனலில் பொய்யாய்
விரியும் தண்ணீர்
கானல் நீரெனக்
காட்சியாகும்!

மண்ணில் கொதிக்கும்
வெப்பக் கோடை
இக்
குன்றில் மறைந்து
குறைந்து வெற்றுக்
கானலாய்ப் பொய்யாய்க்
காட்சியாவதால்
கோடைக்
கானல் என்றிதைக்
குறித்தார் போலும்!

o

வேனல் வெப்பம்
வெங்கதிர்த் தாக்கம்
ஆன மட்டும்
அவதிப் படுத்தும்
அக்கினிச்சூடு—
அனைத்தும் இங்கே
பங்குனி சித்திரைப்
பகலில் கூட

பதமாய் இதமாய்ப்
பனிபடர் மிதப்பாய்
மெதுவாய் வந்தே
மெல்லத் தொடுவதால்
மேனி சிலிர்க்கும்!
மேகம் அணைக்கும்!!
தேகம் எங்கும்
வேகம் தணிக்கும்!

o

ஆம்.
இதோ—
வெள்ளிச் சிமிழாய்
வீழும் அருவி
கொள்ளை அழகில்
குளிக்க வைக்கும்!

o

செண்பகத் தோப்பு!
குறிஞ்சிக் கோயில்!
செங்குத் தான
மூஞ்சிக் கரடு!

o

'ஈக்கலிப்டஸ்'
மரங்களுக்கிடையே
'கோக்கர்ஸ் வாக்'—எனக்
குறுகி விரியும்
அழகிய சாலை!

o

ஆங்கதன் சரிவில்
வண்ணப் பூக்கள்
வரிசை மிளிர
பொன்னாய் மின்னும்
பூங்காத் தோட்டம்

o

கண்ணைக் கவரும்
தண்ணீர் ஏரியில்
மிதக்கும் படகில்
மிதக்கும் அழகிய
கற்பகத் தோட்டக்
காதல் ஜோடிகள்!

o

ஆடை தழுவும்
ஆசைத் தென்றல்!

o

ஆசை தீரா
நேசம் வளர்க்கும்
குறிஞ்சிப் பூக்களில்
உறங்கும் அழகு!

o

கிறங்க வைக்கும்
பாறை இடுக்கில்
வழிந்து பரவும்
தேனடைத் தொங்கல்!

கிள்ளி எடுத்த
கிழங்கு வகைகள்!
முற்றி வெடித்த
முப்பழ மணங்கள்!

o

இவை
நெருங்கிச் சூழ
நிசமாய் நானும்
பரவசம் எய்திடப்
பையத் துயின்றேன்!

முழங்கும் தரையின்
ஒழுங்கிலா ஓசைகள்
முற்றாய் மறந்தே
கோடை மலையாம்
நற்றாய் மடியில்
நான் கிடந்தேனே!

ஒன்றே ஒன்று

கைகளைத் தொட்டு
அவன்
காதல் காதலாய்ப்
பிதற்றினான் இப்படி:

''உன்
நெஞ்சுக்குள்
ஆயிரம் புறா
சிறகடிப்பதைக்
காண்கிறேன்
கண்ணே ....!''

அவள்:
''அத்தனைக்கு
ஏது வசதி ..?
இருப்பது
ஒன்றே ஒன்றுதான்
எலாஸ்டிக் 'ப்ரா'...''

—என்று
உதட்டைப் பிதுக்கியவள்,
பதட்ட மின்றி

அவன்
பாக்கெட்டையும்
பிதுக்கினாள்!

பழக்கூடைக்காரி

சந்தைக்கு வந்தவளே!
    சிங்காரி! மூடு
சலவைக்குள் மல்லாடித்
    திண்டாடும் இன்பப்
பந்துக்கு உரியவளே!
    பருத்திக்காய்முற்றிப்
பாங்காக வெடித்தாற் போல்
    சிரிப்பவளே! வாரச்
சந்தைக்கு வந்தபுதுச்
    சரக்கான சீமைத்
தக்காளிப் பழம் போன்று
    இனிப்பவளே! ஊர்முச்
சந்திக்கு நம்கதையும்
    வருமுன்னே உன்றன்
சம்மதத்தைச் சொல்லாயோ?
    தாமதமேன் இன்னும்..?!

நறுக்கிவைத்த முக்கோண
    வெள்ளரிக்காய்த் துண்டு
நாசிக்கு எடுப்பாக
    மின்னுகின்ற சின்னக்
குருக்கத்திப் பூப்போன்ற
    மூக்குத்திக் காரி!
குணத்தாலே தமிழைப் போல்
    இனிப்பவளே! என்றும்

நெருக்கத்தில் இருக்கையில்
இதமாகி, நீங்கின்
நெருப்பைப் போல் சூடாகி
எந்நினைவை எல்லாம்
கருக்கிவரும் ஒய்யாரி!
எனைச்சேர உன்றன்!
கருத்தென்ன சொல்லாயோ...?
தாமதமேன் இன்னும்..?!

தூக்கத்தில் கனவாக
வருபவளே! பாதித்
தூக்கத்தில் விழித்தாலோ
மறைந்தோடி நித்தம்
ஏக்கத்தில் ஆழ்த்துகின்ற
ஏந்திழையே! என்றன்
எண்ணத்தில் நிறைவாகி
இனிப்பவளே! கொட்டைப்

பாக்குப் போல் நுனிக்காம்புப்
பழமிரண்டைத் தாங்கிப்
பகட்டாக நடக்கின்ற
பழக்கூடைக் காரி!
போக்கில்லை எனக்குன்றன்
புன்னகையின் உண்மைப்
பொருள் சொல்ல வாராயோ!
தாமதமேன் இன்னும்...?!

மங்கலக் கார்த்திகை

கையினில் தீப விளக்கேந்தி
கருத்தினில் தூய ஒளியேந்தி

கார்த்திகைக் கன்னி வருகின்றாள்!
களிப்புடன் இங்கே வருகின்றாள்!

வையகம் எங்கும் அருள்தேக்கி
மனையகம் தோறும் இருள் நீக்கி

பையவே நடந்து வருகின்றாள்!
பைந்தமிழ்க் கார்த்திகை வருகின்றாள்!

தையலர் நெஞ்சம் களிகொள்ள
சின்னவர் பெரியவர் உளமகிழ

ஐப்பசி பெற்ற திருமகளாம்
அழகிய கார்த்திகை வருகின்றாள்!

பொய்யிருள் நீக்கிப் பூவுலகில்
புத்தொளி தேக்கப் புறப்பட்டே

மைவிழி மங்கை வருகின்றாள்!
மங்கலக் கார்த்திகை வருகின்றாள்!!

மங்கை வருகின்றாள்...!

இல்லக் கதவம் திறவுங்கள்!
இளங்கிளி மாதர் எழுப்புங்கள்!
செல்லக் கனவைக் கலையுங்கள்!
செந்தா மரைக்குளம் முழுகுங்கள்!

மார்கழித் திங்கள் வருகின்றாள் — அம்
மான்மகள் இங்கே வருகின்றாள்!

கன்னிப் பெண்கள் கூடுங்கள்!
காதல் நெஞ்சம் தேடுங்கள்!
அன்னப் பொய்கை ஆடுங்கள்!
ஆண்டாள் பாவை பாடுங்கள்!

மார்கழித் திங்கள் வருகின்றாள்-அம்
மான்மகள் இங்கே வருகின்றாள்!

வாசலில் கோலம் தீட்டுங்கள்!
பூசணிப் பூவை நாட்டுகள்!
மாசில் வீணை மீட்டுங்கள்!
மங்கல இசையே கூட்டுங்கள்!

மார்கழித் திங்கள் வருகின்றாள்—அம்
மான்மகள் இங்கே வருகின்றாள்!

சேவை அன்பு காத்திடவே
செம்மை நலங்கள் சேர்த்திடவே
பாவை நோன்பு நோற்றிடவே
பாரெலாம் இன்பம் பூத்திடவே

மார்கழித் திங்கள் வருகின்றாள்-அம்
மான்மகள் இங்கே வருகின்றாள்!

வாழிய மார்கழி வாழியவே!
வாழிய மங்கையர் வாழியவே!
வாழிய பொன்னொளி வாழியவே!
வாழிய வையம் வாழியவே!

தைமகள்...

சித்திரை மங்கை சூலுற்றுப்
பத்தொரு திங்கள் சுமந்தின்று
பெற்றனள் எங்கள் தைமகளை!
பெற்றனம் நாங்கள் பெருமகிழ்வே!!

உழவர் குடியில் தைபிறந்தாள்!
புலவர் மடியில் தை வளர்ந்தாள்!

உலகில் படியும் பொய்பறந்தே
விலகும் படியே தைநடந்தாள்!

தத்தித் தவழ்ந்து வந்தவளே!
தொத்திப் படர்ந்த செந்தமிழே!

மங்கலப் பெண்ணே தைமகளே!
பொங்கலை உண்ணாய் நீமகளே...—!

செயலில் வல்ல குடிபடையெம்
வயலில் நல்ல அறுவடையாம்!
நீ
தைமகள் வந்தாய் என்றதுமே
பொய்மைகள் ஓடிச் சென்றனவே!

ஒரு நாள் கேரளம்

அழகிய மலைகள்
வரிசையும்—
அதனிடை

மிளகுக் கொடிகள்
சுற்றிய கமுகும்—

பால்வடிகின்ற
ரப்பர் மரங்களும்

தேக்கும் பலாவும்
தென்னையும் வாழையும்-

எழில்மிகு உப்பங்
கழிகள் ஊடே
ஊர்ந்து மிதக்கும்
மீன்பிடி படகும்-

கோலம் மிகுகடல்
கோவளப் பகுதியில்
பாடும் அலையிடை

ஆடி மிதக்கும்
கட்டு மரங்களின்
கவினுறு காட்சியும்-

ஆடை களைந்தும்
அலைவழி மிதந்தும்
ஆடவர் பெண்டிர்
குளிக்கும் அழகும்—

நீளக் கூந்தல்
விரிந்தே தொங்கிட
வீதி உலாவரும்
மங்கையர் ஒயிலும்-

பார்க்கும் இடமெலாம்
பருவம் முட்டிய
வேற்கண் மாதர்
முண்டின் அழகும்—

கிளிமொழி அன்ன
கேரள நாட்டு
மலைஞாலத்தின்
இன்னிசைப் பாட்டும்-

ஒரே
ஒரு நாள் மட்டுமே
சேர நாட்டினில்
தங்கிய போதிலும்
தாகம் மிகுந்திட
மாரன் விட்ட
மன்மதக் கணையாய்

என்னை அந்தோ
இன்றும் மயக்கிடும்
என்றும் மயக்கிடும்..!

இனி அக்
கன்னிகழியாக்
காட்சிகள் நினைந்தே
நான்
கவியுரைப் பேனே...!
கதையுரைப் பேனே..!!

சிகரச் சரிவு

உதகை
இயற்கை அழகி!
மலைகளின் அரசி!

கிளர்ச்சியூட்டும்
மலர்க் கண் காட்சியில்
வண்ணக் குவியல்
பூக்களாய் மின்னிட
நெஞ்சம் கவர்ந்திடும்
நீல கிரியாள்!

வானைத் தொடும்
உயர்
சிகர முடியிலும்

ஊசி இலைமரம்,
உருளைக்-கனிச்செடி,

'யூக-லிப்டஸ்'
மூலிகை நறுமணம்!

போகப் பொருளாம்
மதுக்கிண்ண உரசல்!

வேகம் உணர்த்தும்
குதிரைப் பந்தய
ஓட்டம் நடக்கும்
மேட்டுக் குடிகளின்
கூட்ட நெரிசல்!

குன்றினை மேட்டினை
மார்பினில் தாங்கிய
மங்கையர் அணைப்பில்
ஏரியில் மிதக்கும்
படகின் வரிசை...!

மேடாய் உயர்ந்த
மலைகளின் அரசி...!

மேனி சிலிர்க்கும்
கோடை அழகி!

ஆங்கே—
பூகம்பம் இடி
மழையுடன் வந்தே
வெள்ளச் சேதம்
அன்று
விளைத்த புரட்சியில்

தோகையர் ஆடவர்
மாண்டனர்; இன்ப
போகப் பொருட்கள்
மாளிகை வீடுகள்
எல்லாம் அழிந்தன!

இயற்கை சினந்ததால்
வானை இடிக்கும்
ஓலம் எழுந்தது...

சொர்க்கம் — நரகம்
ஆகி அழிந்தது;

கோலம் காட்டிய
குன்றின் அழகில்
கோரம் சூழ்ந்தது . .
குரூரம் படிந்தது.

'ஆட்டம் போடும்
அற்ப மனிதரே...
அழகின் பக்கமே
ஆபத்தும் உள்ளதாம்' . .

என்பதை
நிலை தடு மாறினும்
தெளிவுற அறிவீர் . .
என்றே சொன்னது
அந்த
மலைச் சரிவின் ஓரம்
நிகழ்ந்த
நிலச் சரிவு (அ)ந்தோ . . !

இன்று
பாரதி இங்கு வந்தால்

நேற்றைக்கு
முந்தா நாள்
வைகை
ஆற்றங்கரையோரம்
மஞ்சள் வெயிலடிக்கும்
மாலைப் பொழுதோடு

தன்னந் தனியாக
உள்ளத் தவிப்போடு
வெள்ளை மணல்வெளியில்

கவிதைப் பொருள் தேடி
கற்பனையில் மிதந்தபடி
வெகு நேரம் நடந்தேன்...

ஒரு கவிதை கூட
என்னுள்
ஓடி வரவில்லை.
மனம்
நொந்து நைந்திட்டேன்...
அப்போது,

தடந் தோளும் மீசையும்
தலை நிமிர்ந்த பார்வையுமாய்-
தலைப் பாகை அணிந்தபடி
தையல் கிழிசல்
ஏதும் இலாதபடி
புத்தம் புதிதான
ஆடை புனைந்த படி

பாரதியாம் என்பாட்டன்
கண்ணெதிரே வந்திட்டான்;
துள்ளிக் குதித் திட்டேன்...
தொட்டுத் தாள் பணிந்தேன்...
அள்ளி எடுத்தென்னைப்

''பரா
சக்தி துணை புரிக''
—என்றே அணைத்திட்டான்.
மந்தரம் போல்
அந்த ஒரு சொல் கேட்டு
பேசத் தொடங்கி விட்டேன்;

உணர்ச்சிப் பெருக்கோடு
கவி[illegible]ாய்ப்
பேசத் தொடங்கி விட்டேன்...
''முண்டாசுப் பாரதியே...
முத்தமிழின் சாரதியே..
வைதீகச் சூழலில்
வந்து நீ ஜனித்தாலும்
தெய்வீகப் புலவனாய்
ஆகாமல்
தேசியக் கவிஞனாய்த்
திகழ்ந்தவனே...

வேத புராணம் விளம்பி
மறுமை உலகம் காட்ட
மந்திரங்கள் ஓதாமல்
அடிமை விலங்கொடித்து
புரட்சி மணம் கமழப்
புதிய சங்கீதம்
இசைத்தவனே....
மண்ணில் புழுவாய்
மரத்துக் கிடந்த
சொந்த மக்களைத்
தட்டி எழுப்பிச்
சுதந்திரத் தீ
வளர்த்தவனே...!

எட்டையபுரம்
சமஸ்தானப் புவவன் நீ..
ஆனாலும்,
அரசு புகழ் பாடும்
ஆஸ்தானக் கவிஞனாய்ப்

பல்லக்கில்
பவனி வராமல்
தேச விடுதலைக்கு
முரசு கொட்டி
வீதி வலம் வந்தவனே...

அடிமைத் தளையறுக்க
ஆர்ப்பரித்து நின்றவனே..

''என்று தணியும் இந்தச்
சுதந்திர தாகம்''—எனக்
கண்ணீர் உகுத்தவனே...

எண்ணமெல்லாம் நெய்யாக..
இன்னுயிரில் மலர்ந்த
வண்ண விளக்கினை
அணையாது காத்தவனே..

ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்தே
வாராது போல் வந்த
மாமணியைத் தோற்போமோ?''
—என
வில்லின் கணையாய்ப் பாய்ந்து
வீரம் விளைத்தவனே...

''உன்னைத்
தலை தாழ்த்தி வணங்குகிறேன்''
எனச் சொல்லி
வார்த்தை மடை திறந்தேன்.

''நூற்றாண்டு நன்னாளில்
உன்னைப்
போற்றி மகிழ்கின்றோம்,'—
எனக் கூறி
ஆர்ப்பரித்து நின்றேன்.

அவன்

என்

தோள் மீது கைபோட்டுச்
சுடர் முகம் தூக்கி
முதல்
கேள்வியொன்று கேட்டான்.

''இந்த தேசம்
சுதந்திரம் பெற்றது
எப்போது...?''—
என்றான்.

''ஆகஸ்ட் 15-ல்''

''வருஷம்..?''

''1947–ல்

–நள்ளிரவில்...''

கண்ணை மூடிக்
கணக்கிட்டான் போலும்.

நானே தொடர்ந்தேன்;

அந்தத்
தேதியிலும்
திங்களிலும்
மட்டுமே நீ
உடன் படுவாய்...
வருடத்தில்
முரண் படுவாய்...

உன்னைப் பொறுத்த
அளவில்,
நாற்பத்தி ஏழுக்கு முந்தி
இருபதிலேயே
இந்தியா
விடுதலை பெற்று விட்டது.

அதனால் தான்
அன்றே—

‘‘ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோம்
ஆடுவோமே– பள்ளுப்
பாடுவோமோ...’’

—என
1920-லேயே
ஆடிப் பாடினாய்..’’—
என்றேன்.

‘‘ஆம்.
என் கணக்குப் படி
இப்போது
நம்
சுதந்திரத்துக்கு
வயது–
அறுபதுக்கு மேல்
ஆகிவிட்டது’’– என்றான்.

ஓ...
பாரதிப் பாட்டனே
அதனால் தான் நாங்கள்
தள்ளாடித்
தவிக்கின்றோம்..
திண்டாடித்
திரிகின்றோம்...

நீ
சொன்னதையும்
நாங்கள்
செய்ததையும்
இப்போது
செய்வதையும்
சற்று வந்து காணாயோ...

சுற்றி வந்து பாராயோ...
என்று அழைத்தேன்.

''எவனையும் எதனையும்
வந்து நான் பாரேன்...
சின்னக் கவிஞன்

உன்
சித்திரை வார்த்தை வழி
தேவி பராசக்தி
இங்கிருந்தே எனக்கு
எல்லாமும் காட்டுவாள்''
என்றே
கர்ஜித்தான் அந்தக்
கவிச் சிங்கம்.

''எத்தனையோ பேர்கள்
எத்தனையோ ஊர்கள்
இருக்க
இங்கு வந்து என் முன்னே
தோன்றினையே...''
என்றேன்.

என் மகள்
சகுந்தலைக்கு
வைகை நதிக் கரையாம்

மானாமதுரை நகர்
சோமநாதபுரத்தில் தான்
திருமணம் நடந்ததாம் ..
தெரியுமா உனக்கு...?

[1924–[இல்]
அந்த மண்ணையும்

அதிலே நடை போட்டு
எந்த விதம் கவிதை
எழுதுவேன் என்றே
துடிக்கும் உன்னையும்
பார்க்கவே வந்தேன்—

பார்த்து விட்டேன்
இனிக் கவிதை
ஆர்த்திடுவாய் மகனே...''
என்றே
ஆசி வழங்கி நின்றான்.

பின்
நான்
சில
பேசக் கேட்டிருந்தான்;
கேட்டுக்
கைகொட்டிச் சிரித்திட்டான்;

நான்
சொன்னதையும்
அவன்
கேட்டதையும்
இனி
உங்களுக்கும் சில
சொல்லி வைப்பேன்;

'பாரதீ...
அன்றே
ஜாதி மதங்களைப் பாரோம்..
என்றாய்.

ஆனால்
தேர்தல் நேரத்திலும்

திருமணக் காரியத்திலும்—
தவிர

மற்றபடி நாங்கள்
இப்போது
ஜாதி மதங்களைப்
பார்ப்பதில்லை.

குறிப்பாக,
ரேஷன் கடை வாசலிலும்—
திரை அரங்கு முன்
நீண்ட க்யூவில்
நிற்கும் போதும்-

நகரப் பேருந்துகளில்
பயணிக்கும் போதும்--

கண்டிப்பாய் நாங்கள்
வேதியராயினும்
வேறு குலத்தவராயினும்
ஒன்றாகவே
மிக
நன்றாகவே..

நெருக்கி இடித்து
தீண்டாமை- ஜாதி பேதம்.
பாராமல்
ஒட்டியே நிற்கிறோம்...''
—என்றேன்.

அவன்
கைகொட்டியே சிரித்திட்டான்!

o

''செப்புமொழி பதினெட்டும்
சிந்தனை ஒன்றும்
உடையதாய்ச்
சொன்னவனே...
சொன்ன உன் வாய்க்குச்
சர்க்கரை போட வேண்டும்..

ஆம்,
வாக்குக் கேட்டு
வரும் போதெல்லாம்

அது
என்ன தேர்தலாக
இருந்தாலும் சரியே-

செப்பு மொழி-
பசப்பு மொழி
பதினெட்டு உடையோம்...
பதினெட்டு என்ன
பதினாயிரம் உடையோம்

ஓட்டுக் கேட்டு
பட்டி தொட்டி
வயல் வரப்பு
எல்லாம் அலைந்து

யாவரையும்
கைகூப்பி வணங்கி
வாக்குறுதிகளை
அள்ளி வழங்கி
வந்தனை செய்கின்ற
சிந்தனை ஒன்றுடையோம்...''
-என்றேன்.

சீச் சீ... மனிதர்களே
எனக்
கைகொட்டிச் சிரித்திட்டான்.

o

''ஓ...பாரதியே..:

வங்கக் கடலில் வீழும்
கங்கை வெள்ளம்
மையத்து நாடுகளில்

மடைவழிப் பாய்ந்தால்
உலகோர்க் கெல்லாம்
உணவளிக்கலாம்—
எனக்
கனவு கண்டாய்.

கங்கை —காவிரியை
இணைக்கச் சொன்னாய்.

ஆனால்

நாங்கள்
காசி— ராமேசுரத்தை
இணைத்துள்ளோம்.

'கங்கா —காவேரி—'
எனப் பெயர் சூட்டி
ரயில்களை விடுத்துள்ளோம்;

உனது
சொல்லை மீறி

நதிகளை இணைக்கத்
தவறிய தாலோ என்னவோ

பாலத்தின் மீது
பாய்ந்து கடக்கும் போதே
ரயில்கள்
தண்ட வாளத்தை மீறித்
தடம் புரண்டு விழுகின்றன..''
என்றேன்.

'கட கட'வெனக்
கைகொட்டிச் சிரித்திட்டான்.

o

''இன்னும்..?''

''கேள்...

''காவிரி வெற்றிலைக்கு
மாறு கொள்வோம்.–''
என்றாய்.

ஆனால்
அந்தக்
கங்கை நதிப் புரத்து
கோதுமைப் பண்டத்திற்கு-
வீதி நெடுகிலும்
நியாய விலைக் கடை முன்
கையிலே பையோடும்

மெய்யிலே சோர்வோடும்
நீண்ட நெடு நேரம்

கால் கடுக்கக்
காத்துக் கிடக்கிறோம்.
உடல்
வேர்த்துக் கிடக்கிறோம்...''
என்றேன்.

கைகொட்டிச் சிரித்தான்
பின்
வேதனையால் அவன்
விழி பொத்திப்
பரிதவித்தான்.
o
''உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை... அச்சமில்லை...''
என்றவனே...

இப்போது இங்கு
எவனுக்கும்
அச்சம் என்பதுஇல்லைதான்..''
—என்றேன்.

''எதில்...?''

''எல்லாவற்றிலும்.
குறிப்பாக,
கத்தை கத்தையாய்க்
கள்ள நோட்டு
அடிப்பதில்-

'கறுப்பு-வெள்ளை' என்று
கை நீட்டி வாங்குவதில்-

கள்ளக் கடத்திகளாய்
மெல்லச் சுரண்டுவதில்-
கலப்படம் செய்வதில்—

எதிலும் இங்கு
எவனுக்கும் இப்போது
அச்சமில்லை ஆசானே..''
—என்றேன்.

''நச்சைவாயிலேகொணர்ந்து
நண்பர் ஊட்டு போதிலும்
அச்சமில்லை''— என்றாய்.

வார்னிஷ் கலந்து
கள்ளச் சாராயம் குடித்து
குடிசை குடிசையாய்க்
குப்பம் குப்பமாய்க்
குடல் வெந்து செத்தாலும்

மீண்டும் மீண்டும்
சேர்ந்தே குடித்துச்
சேர்ந்தே மடிவதில்
எவனும் இங்கு
அச்சப்படுவதில்லை
அய்யனே...'' என்றேன்.

மெய்யாய்க் கை கொட்டி
மிக வருந்தி நகைந்திட்டான்;

பின்
சோகம் வழிய
மெல்ல நகர்ந்திட்டான்.

o

''முண்டாசுப் பாரதியே...
முடிவாய்
இதை மட்டும் கேள்'' -என்றேன்

சிவந்த விழி உருட்டிச்
சின்னவன் என்னைத்
தீர்க்கமாய்ப் பார்த்தான்.
''சேதுவை மேடுறுத்தி
வீதி சமைப்போம்
சிங்களத் தீவினுக்கோர்
பாலம் அமைப்போம்...''

-என

அன்று
எங்களுக்காகத் தானே
பாடினாய்...
கேள்.. சொல்கிறேன்..

வீசி அடித்த
வெள்ளப் புயலில்
இன்று
சேதுக்கரை
சேதப்பட்டுப் போனது.

சிங்களவர் தம்
தொல்லைக் காளாகித்
தங்கத் தமிழர்கள்
விரட்டி அடிக்கப் படுகிறார்கள்.
அங்கிருந்து
துரத்தி அடிக்கப்படும்
சோதரர் தம் சடலங்களை
அடுக்கியே
மன்னார் வளை குடாவில்

மனிதப் பாலம் அமைத்து விடலாமா
என யோசிக்கிறோம்...

யாழ்ப்பாணக் கொடுமைகளுக்காய்
ஐ. நா. சபையில் கூட
யாசிக்கிறோம்.. இப்போது.''
என்றேன்.

இதுவரை
ஏளனமாய்க் கை கொட்டி
நகைத்திட்ட பாரதி..
இப்போது
இடிக்குரல் எடுத்து
எக்காளமாய்ச் சிரித்தான்.

அவன்
கனவாய் எழுப்பிய
இடி முழக்கம் கேட்டு
வான் மேகம் திரண்டதால்
உடன்
வைகையிலே வெள்ளம் வர
வெள்ளத்தின் வழியே
வீறிட்டுப் பாய்ந்து
சேதுவில் நீந்தி
சிங்களத் தீவுக்கே
விரைந்தான்.
என் சிந்தை கலைய
நான்
இங்கு வந்தேன்.

சிவகங்கை மன்னர் துரை சிங்கம் அரசு கலைக் கல்லூரியில் வாசித்த கவிதை —நாள்: 3-2-1982

உலகம் மகிழும்!

‘‘பாரதம் என்பது
புண்ணிய பூமி;
சோவியத்து என்பது
சமத்துவ தேசம்’’.
எனச்
சொல்லுவார்... சொல்லுவார்!
இல்லை மறுப்பே.

எப்படி...?
இங்கோ—
காக்கை பறக்கிற
கடலிடைத் தொலைவில்

நம்

காலடி கிடக்கிற
இலங்கை கூட
சற்றே
வாலை ஆட்டிப்
பார்க்கிற தென்றால்
இப்
பாரதம் என்பது
புண்ணிய பூமியே...!

o

அங்கோ—

முதலா ளித்துவ
அமெரிக்கா நினைத்தால்

எதையும் எவரையும்
அழிக்க முடியும்
ஒழிக்க முடியும்''

என்ற நினைப்பைப்
பொடிப் பொடியாக்கிடும்
வாலிப மிடுக்கு!

நின்று எதிர் நிற்கும்
நவீன உத்தி;

உழைப்பவர் கையில்
உலகைத் தூக்கி
மலைப் புறத் தந்த
மகத்தான சாதனை;

பாமரர் என்றொரு
சாதியே இல்லாப்
படித்தவர் பூமி
எதையும்
படைப்பவர் பூமி..

ஆகவே
சோவியத் என்பது
சமத்துவ தேசம்.

o

இந்த நம்
புராதன தேசமும்

அந்தப்
பொதுவுடைம தேசமும்

இந்த
சரித்திர தேசமும்
அந்த
சமத்துவ தேசமும்
நட்பில் திளைப்பதால்
நானிலம் பிழைக்கும்!

o

இந்த
புண்ணிய பூமியும்
அந்த
பொதுவுடமை நாடும்
கஞ்ணிய மிக்க
கலாசார உறவில்
ஒன்றாய்க் கலப்பதால்
உயரிய பிணைப்பதால்
கலகம் ஒழிந்தே
காசினி மகிழும்!

மௌனம்

வாய் மடையில் பொங்கி வரும்
வார்த்தை நீரை
வடிகட்டித் தேக்குகிற
அடைப்பே 'மௌனம்'!

காய் சினத்தை- சச்சரவைக்
கலகச் சூட்டைக்
கச்சிதமாய் ஆற்றுகின்ற
மருந்தே 'மௌனம்!'

நாயாக இரைகின்ற
மனத்தின் கொதிப்பை
நயனத்தில் வெளிப்படுத்தும்
'நளின' மௌனம்!

பாய் விரித்த படுக்கையிலே
ஊடல் தீரப்
பதிந்து வரும் சத்தமின்றி
'முத்த' மௌனம்!

கற்பனை

கு

''கள்ளை உண்பது தீதே..''
எனினும்

ஒற்றைப் பனையில்
ஓங்கிய தென்னையில்

ஊறிய கள்ளை
நித்தம் நித்தம்

ஒவ்வோர் வேளை
அளவோடு உண்டால்
நெஞ்சச் சளிகள்

'காசம்— கபம்' எல்லாம்
அஞ்சிப் பறந்தே
அடியோடு அகலும்''—

என்றே
நாட்டு மருத்துவர்
சொல்லுவார்;
கேட்டிருக்கின்றேன்:

ஆனால்
'போட்ட' தில்லை நான்..!

o

ஒற்றைப் பனைபோல்
உயர்
கற்பனையில்
ஊறும் கவிதைகள்
பள்ள உள்ளம்
தேறும் வண்ணம்
தெளிவாய்ப் பிறக்கும்..!

பூ
நாறும் மணம் போல்
புதுப்புதுக் கருத்தைப்
பாடும் கவிதைக்கு
மூலம் எதுவாம்..?
முதலும் எதுவாம்..?!

o

சொற் சிலம் பாடும்
அற்புதக் கவியெல்லாம்
கற்பனை வடிக்கும்
களிதேன் அன்றோ.?

o

கள்ளை வடிக்கும்
பனை போல்
கற்பனை வடிக்கும்
கவிதை வாழ்க!

o

கற்பனை என்பதும்
கவிதை என்பதும்

ஒட்டிப் பிறந்த
இரட்டைக் குழந்தைகள்.!

o

அறிவியல் சார்ந்த
முறை வழிச் செல்லும்
ஒரு தனிக் கற்பனை
உயர்விஞ் ஞானம்!

o

நிறை குறை உலகில்
நிலவுதல் அகன்றிட
தெளிவுறச் சொல்லி
தேற்றிடப் புலவோர்
பாடிய யாவும்
காவியக் கற்பனை.!

o

நாடக மேடைகள்
ஓவியக் கற்பனை.

o

நாளை
மணக்கப் போகும்
நாயகி யாளை
நினைத்து நினைத்து
ஆளன் பின்னும்
அழகியல் தோரணம்
காதல் கற்பனை!

அதுவே
இளையவர் நெஞ்சில்
இனிக்கும் கற்பனை!

மண் கிளறும் தோழா!

கண்கவரும் மல்லிகைப்பூ
கத்தரிக்காய்– கீரை
கனி குலுங்கும் தக்காளி–
பப்பாளி— வாழை

பண் கவர்ந்து வருகின்ற
குயிலோசைப் பாட்டு,
பண்புடைநல் ஆன்றோரின்
தெளிவுள்ளம் போலும்

மண் தவழ நடக்கின்ற
சிறுவாய்க் கால் தண்ணீர்
மாத்தமிழின் இலக்கிய மாய்
வாய்த்துள்ள சோலை

மண் கிளறி மனங் கிளறும்
வயலுழைப்புத் தோழா.. உனக்கு
வணக்கமுடன் தைப்பொங்கல்
வாழ்த்துரைப் பேன் ஏற்பாய்!

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்...

எங்கள் ஊரில்
ஒரே ஒரு பாலிடெக்னிக்!
அதிலும்
எங்கள் கட்சி
எம்.எல்.ஏ.வுக்கு
எப் போதும் ஒரு சீட்
இலவசமாய் உண்டு.

ஆனால்—'அவர்'
இந்த முறையோ
சொந்த மகனையே
சேர்க்க நினைத்தார்..

வேறு
எந்த சிபாரிசையும்
ஏற்க மறுத்தார்.

அதனால்
பெரும்படியான
வரும்படி இழப்பென

அவர்
'திருமதி' பாவம்
சடைக்கலானாள்!

அப்போது

தேர்வு முடிவு
தெரிய வந்தது;

பையன் அந்தோ
ஃபெயிலாய்ப் போனான்.

சேதி தெரிந்ததும்
வரிசைகள் கொணர்ந்து
பலர்
வரிசையாய் நின்றனர்!

அப்புறம் என்ன..

ரெண்டு மடங்காய்
ரேட்டை ஏற்றினார்..

ரெட்டை வடமாய்ச்
சங்கிலி வாங்கி
கலங்கிய மனைவியின்
கழுத்தில் மாட்டினார்....

'சன்' ஃபெயிலானாலும்
பொன்
'செயின்' கிடைத்ததால்
ஈன்ற பொழுதிற்
பெரிதுவந்த
அம்மாவின் மகிழ்ச்சிக்கு
அளவுதான் ஏது?!

பிள்ளை வயதில்
கல்லணைக் குன்று!

ஊத்துக்கல்; மூன்றுகல்:
ஒற்றை உரலுக்கல்;

சோத்துப் பெரும்பாறை;
தேக்குமரப் போத்தாய்

வளர்காவும் வெள்ளை
அரளியொடு தாழை

மலர்யாவும் சார்ந்த
மலை!

வெற்பில் படர்மஞ்சு
வெள்ளரளிப் பூமணந்தே

நிற்கும் நெடுந்தாழை
வெண்மைநிறம்! -புற்கள்

பசுமைநிறம்! மீன்கள்
பளிங்குநிறம்! பாடும்

நிசிக்கருமை வண்டின்
நிறம்!

ஆலம் விழுதெனவே
அங்கங்கே ஓடிவரும்

நீலமலைக் குன்றின்
நீரூறி—நாலும்

ஒருவடிவில் சேர்ந்தே
உயர்மலையில் பாங்காய்

அருவியெனப் பொங்கும்
அலை!

கற்கள் அணைவாகக்
காத்தே வழி சமைக்க

வெற்பின் நடுவே
விரைந்தோடிப் -புற்கள்

இடைபுகுந்து தாழைச்
செடிவளர்த்து மண்ணில்

நடைபயிலும் ஓடை
நடந்து!

ஆடிவரும் நீருக்கு
(அ)ணைவாகிச் சீருடனே

ஓடிவரும் உற்றத்
துணையாகிக் —கோடதனில்

கற்கள் அமைந்ததனால்
கல்லணை யாமென்னும்
சொற்குறித்து வைத்தாரே
சொல்!

கல்லணைந்தே நீரும்
கசிந்தோடிப் பாய்வதனால்

'கல்லணை'யென் றோதினார்
காரணமாய்!-சொல்லணைந்த

செந்தமிழின் உட்பொருளே
தென்னர் மொழிச் சிறப்பே

உன்றன் உயர்வே
உயர்வு!

தாழை மணம்பரப்பும்;
தண்ணீர் சலசலக்கும்;

வேழம் படுத்ததென
வெற்பிருக்கும்;-ஏழைக்கே

ஈயும் மனம் போல்
இயற்கை கொலுவிருக்கும்;

பாயும் அருவிநீர்
பாங்கு!

தண்ணென்று தென்றல்
தமிழாய்த் தவழ்ந்து வரும்;

பண்ணொன்று பாடும்
வரிவண்டு;-விண்ணின்று

பொங்கும் நுரையமுதம்
பூமிக்குப் பாய்வதெனப்


பொங்கியே ஓடும்
புனல்!

மந்தியின் வாலை
மரவிழுதாம் என்றெண்ணிப்

பொன்னூசல் ஆடுமே
பூங்குயிலும்!-அந்தியில்

வெண்ணிலவுப் பூச் சூடித்
தெற்கே மலைதானும்

பெண்ணென்றே தோன்றும்
பெரிது!



கவிஞர் வைகை வாணன் கடந்த முப்பதாண்டு களாக வளமார்ந்த வைகைக் கரையில் வாழ்ந்து வருபவர். அங்கே காற்றோடு கவிதை மணக் கிறது; வைகை நீரோடு கற்பனை சுரக்கிறது. கண்ணிற் படுவனவெல்லாம் கவிதையைக் காட்டி நிற்கும், கட்டற்ற கற்பனையை ஊட்டி நிற்கும். அதுவே ''அந்தி மழை''யின் ஜனனத்துக்கு ஆதாரம். ''கண்ணில் படுவதெல்லாம் என் கவிதை கட்டித் தழுவி வரும் ''எனப்பாடுவதே இதற்குச் சான்று.

வாய்த்த நல்ல ''ரேசன்' கடை அரிசி, பருவம் தவறிப்பொய்த்தவானம், வறுமைமிஞ்சிவாட்டிய சோகம், கீறல் விழுந்த வயல்கள், கிளிகள்கூவா மாமரங்கள், ஆடுவார் அற்ற அரசமரங்கள், விழுதுகாணா ஆலமரங்கள், இப்படியான இன்றைய கிராமத்தின் நிலைகேட்டு 'வைகை' எழுதுகின்றவைரவரிகளில் மண்ணின் மணத்தை மாந்திப்பருகிய கவிஞரின் மாண்பும் மாறாத நேயமும் தெரிகிறது, சின்னப் பிணக்குகளைச் செதுக்கிஎறியும் நேர்மை புரிகிறது.

இப்படி ஆயிரமாயிரம் அற்புதங்களைப் படைக் கும் வைகைவாணன் வரலாற்று வாணனாக வலம்வர வேண்டும்,

—நா. முகம்மதுசெரீபு